***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 336/2019 – DW.1***

| | |
|---|---|
| *Name* | சரவணசபரிநாதன் |
| *Father/Husband's Name* | கந்தசாமி |
| *Village* | மன்னார்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *52* |

***1,2,4,5* எதிரிகள் ஆஜர். 3 வது எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 02.12.2025.*

***எதிரிகள் தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் திருவாரூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமனற்த்தில் உதவியாளராக வேலை செய்து வருகிறேன். தற்போது நான் மன்னார்குடியில் வசித்து வருகிறேன். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் காலத்தில் நான் எங்கு வசித்து வந்தேன் என்றால் மன்னார்குடியில் ஞானம் நகரில் வசித்து வந்தேன். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் 07.02.2018 ம் தேதியில் திருவாரூர் முதன்மை மாவட்டத்தில் உதவியாளராக பணிபுரிந்தேன். நான் ஏற்கெனவே தாக்கல் செய்துள்ள ஆவணம் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிப்ரவரி 2018 ல் திருவாரூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் வருகை பதிவேடு ஆவணம் சான்றிட்ட நகல். **எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** (இந்த ஆவணமானது இந்திய சாட்சியல் சட்டம் பிரிவு 11ன் கீழ் வழக்கின் முதல் நிலையிலே எடுக்ககூடிய Plea ஆகும் என்பதால் இந்த சமயத்தில் இந்த Plea ஐ எடுக்கமுடியாது என்பதால் அரசு தரப்பில் ஆட்சேபணை செய்யப்படுகிறது. **எ.சா.ஆ.1 ல்** எனது பெயர் 18 வது வரிசையில் உள்ளது. அன்றையதினம் காலை 10.00 மணியில் இருந்து 05.45 வரை எனது அலுவலக நேரம்

ஆகும். 07.02.2018 ம் தேதியன்று இரவு 07.00 மணிக்கு தான் அலுவலகத்தில் இருந்து எனது வீட்டிற்கு கிளம்பினேன். 07.00 மணியில் இருந்து கிளம்பி எனது மன்னார்குடி வீட்டிற்கு பேருந்தில் வருவதற்கு 11/2 மணி நேரம் ஆகும். இந்த வழக்கு சம்பந்தமாக எங்களை அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் விசாரித்தார்கள் என்றால் விசாரிக்கவில்லை. 07.02.2018 ம் தேதியன்று சம்பவம் எதுவும் நடக்கவில்லை. நான் அலுவலகத்தில் இருந்தேன். இதுசம்பந்தமாக போலீசார் விசாரித்தால் நான் அலுவலகத்தில் இருந்த விபரம் தெரியவந்திருக்கும். இந்த வழக்கு பொய் வழக்காகும். இந்த வழக்கில் இருந்து எங்களை விடுதலை செய்ய வேண்டும்.

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.Sc Maths. நான் நீதிமன்ற ஊழியர் என்ற சொன்ன நிலையில் நான் எந்த வருடத்தில் பணியில் சேர்ந்தேன் என்றால் 1994 ம் ஆண்டு. என்னுடைய அலுவலக நேரம் என்ன என்றால் காலை 10.00 மணியில் இருந்த 05.45 வரை. பொதுவாக ஒரு மாதத்திற்கு இரண்டு மணி நேரம் பணியில் இருந்து permission எடுத்துக்கொள்ளலாம் என்றால் சரிதான். TN 50 Ax 4963 என்ற பதிவெண் கொண்ட கார் யாருடைய கார் என்றால் எனது மனைவியின் பெயரில் உள்ள கார். (இந்த வழக்கில் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் அரசு தரப்பு வழக்கறிஞர் TN 50 Ax 4963 என்ற பதிவெண் கொண்ட கார் இந்த வழக்கில் எந்த இடத்திலும் குறிப்பிடபடவில்லை என்றும், அதனால் இந்த கேள்வியை கேட்க முடியாது என்று ஆட்சேபணை செய்தார். ஆட்சேபணை நிராகரிக்கப்பட்டது.) என்னுடைய மனைவிக்கு கார் டிரைவிங் தெரியாது. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் திருமண பத்திரிக்கை அசா.1 க்கும், 1 வது எதிரிக்கும் நடந்த திருமண பத்திரிக்கை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பொது அதிகார ஆவணத்தின் நகலில் உள்ள புகைப்படத்துடன் கூடிய எனது மனைவியினுடையது கையெழுத்தா என்றால் எனக்கு தெரியாது. சம்பவ தேதியன்று மாலை சம்பவ இடத்தில் தான் இருந்தேன் என்றாலும், தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.